மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பி.டி. ஆசிரியர்களுக்கும், முதல் நிலைத் தமிழாசிரியர்களுக்கும், சிறப்பு ஆசிரியர்களுக்கும் 10 ஆண்டுக்கால அடிப்படையில் தேர்வு நிலை வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருந்தாலும், சிறப்பு ஆசிரியர்களைப் பொறுத்த வரையிலும் விளக்கம் கேட்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. என்ஜினியரிங் இன்ஸ்ட்ரக்டர்ஸ், அக்ரிகல்சுரல் இன்ஸ்ட்ரக்டர்ஸ், செக்ர டேரியல் அஸிஸ்டெண்ட்ஸ் என்று இருக்கும்போது, ரூ. 300 சம்பளம் வாங்குகிறவர்களுக்கு இந்த கிரேட் கொடுக்கலாமென்றும், ஆனால் ரூ. 375 வாங்கி ரூ. 650க்கே போகிறவர்களுக்குக் கொடுப்பது சரியாகாது என்றும் நிதித் துறையினர் மறுப்பு தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த விளக்கங்கள் பெற்றதற்குப் பிறகு, ரூ. 300 அடிப்படை வாங்குகிறவர்களுக்கும், பி. டி. ஆசிரியர் வாங்குகிற அடிப்படையிலே கிடைத்துவிடும். தற்போது நிதித்துறையைக் கலந்து கொண்டு நாம் முடிவு செய்ய வேண்டியிருக்கிற காரணத்தால்தான், காலத் தாழ்வு ஏற்பட்டிருக்கிறது. விரைவிலே அதுபற்றி அறிக்கை விடுவோம்.

*191 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of Thiru K. S. Ganapathi): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that the Government granted Selection Grade Scale of Pay to all those who are in the pay scale of Rs. 300–15–420–20–500 and who have completed 10 years of service; and

(*b*) if so, the reason for the denial of Selection Grade to erstwhile Grade-I Language Teachers, Secretarial Assistants, Agricultural Instructors etc., who also draw the same scale of pay ?

திரு. பி. ஆர் தாமஸ் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்); மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ரூ. 300—15—420—20—500 சம்பள வீதத்தில் பணியாற்றி 10 ஆண்டுகள் பணி முடித்த அனைவருக்கும் தேர்வுத்தர சம்பள வீதத்தை அரசு வழங்கியுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், இதே சம்பள வீதத்தைப் பெறுகிற முன்னாள் முதல்நிலை மொழி ஆசிரியர்கள், அலுவலகவியல் உதவியாளர்கள், வேளாண்மைப்பள்ளி ஆசிரியர்கள் போன்றோருக்கு தேர்வுத்தரம் அளிக்க மறுப்பதற்கான காரணம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) அரசாணை எண். 519, கல்வி, நாள் 31—3—1973-ல் பி.டி. ஆசிரியர்களுக்கும், முதல்நிலைத் தமிழாசிரியர்களுக்கும், சிறப்புப் பிரிவு ஆசிரியர்களுக்கும்,

1975 மார்ச் 27]

பத்தாண்டு காலப் பணி அடிப்படையில் தேர்வு நிலைப்பதவி அளிக்க ஆணையிடப்பட்டது. அதன்படி பி. டி. ஆசிரியர்களுக்கும் முதல்நிலைத் தமிழாசிரியர்களுக்கும் தேர்வுநிலை அளிக்கப்பட்டது. தேர்வு நிலை அளிக்கப்பட வேண்டிய, வினாவில் குறிப்பிட்டுள்ள, சிறப்புப் பிரிவு ஆசிரியர்களுக்கும் தேர்வுநிலை கொடுப்பதை தெளிவாக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

Grade-I Ex-Hindi Pandits

* 192 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of Thiru K. S. Ganapathi) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) the number of Grade-I Ex-Hindi Pandits in the Revenue District of Tiruchirappalli, working in 'B' Wing Schools, who have passed the Pulavar Examination of the Madras University and working as Secondary Grade Teachers, without being absorbed as Grade-I Tamil Pandits; and

(*b*) the reason therefor ?

முன்னாள் முதல்நிலை ஹிந்தி ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்சிராப்பள்ளி ரெவின்யூ மாவட்டத்தில் உள்ள "பி" பிரிவு பள்ளிகளில் பணியாற்றும் முன்னாள் முதல்நிலை ஹிந்தி ஆசிரியர்களில் எத்தனை பேர் சென்னைப் பல்கலைக் கழகப் புலவர் தேர்வில் தேறி செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்தும் முதல்நிலைத் தமிழ்ப் பண்டிதர்களாக நியமிக்கப்படவில்லை ?

(இ) அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஒருவர் தான்.

(இ) இரு மொழிக் கொள்கையைக் கடைப் பிடித்ததன் காரணமாக முன்னாள் ஹிந்தி மற்றும் இதர மொழிப் பண்டிதர்களும் அன்றைய தினத்தில் அவர் அவர்களது பொதுக் கல்வித்தகுதிகளைப் பொறுத்து ஆசிரியரல்லாத பதவிகளிலோ அல்லது நடுநிலை, இடைநிலை மற்றும் பி. டி. ஆசிரியர்களாகவோ நியமிக்கப்பட்டனர். அவர்கள் எந்தப் பதவியிலிருந்தாலும் அவர்களது ஊதியத்திற்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. குறிப்பிட்ட ஆசிரியருக்கு மாற்றுப் பதவி அளிக்கும் பொழுது முதனிலை தமிழ்ப் பண்டிதராவதற்கு தகுதி பெற்றிருக்கவில்லை யாதலால் முதனிலை தமிழ்ப் பண்டிதராக எடுத்துக் கொள்ளப்படவில்லை.